## இரசாயன பொருட்களை கவனமாக கையாளவும்

இதன் மூலம் நீங்கள் உடல் நலனையும் சுற்ற சூழலையும் பாதுகாக்க முடியும்

### வாங்குதல்

1 அபாய குறியீடுகளை பின்பற்றவும்
2 அபாய குறியீடுகளை படிக்கவும்
3 மாற்றுப் பொருட்களை பரிசீலிக்கவும்
4 தேவைக்கு அதிகமாக வாங்காமல் இருக்கவும்

### உபயோகம்

5 பயன்படுத்தும் வழிமுறைகளை பின்பற்றவும்
6 பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றவும்
7 தக்க பாதுகாப்பு உபகரணங்களை அணியவும்
8 பார்வையில் இல்லாது இருக்க விட வேண்டாம்.

### சேர்த்து வைத்தல் மற்றும் அழித்தல்

9 குழந்தைகளுக்கு எட்டாத தூரத்தில் பாதுகாப்பாக வைக்கவும்
10 உணவு வைக்கும் பாத்திரங்களில் எப்போதும் வைக்கக் கூடாது
11 அழித்தலுக்கான வழிமுறையை பின்பற்றவும்

CHEMINFO.ch

Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Bundesamt für Gesundheit BAG
Staatssekretariat für Wirtschaft SECO
Bundesamt für Umwelt BAFU
Bundesamt für Landwirtschaft BLW



# குறியீடுகள் தினசரி அபாயத்திற்கான

சுகாதாரம் மற்றும் சுற்றுசூழலை பாதுகாக்க: அபாய குறியீடுகள் மற்றும் பாதுகாப்பு குறிப்பீடுகளை பின்பற்றவும்.

தமிழ்


CHEMINFO.ch

## ஆபத்து அடையாளங்களைக் கவனிக்கவும்

இரசாயனப் பொருட்களைப் பாதுகாப்பாகக் கையாளுவதற்கு முன்னராக அவைகளின் ஆபத்து அடையாளங்களைக் கவனிக்கவும். அனைத்து இரசாயனப் பொருட்களிலும் உலகரீதியாக ஒரேவிதமான அடையாளங்களைக் காணலாம். அவைகளில் ஒட்டப்பட்டுள்ள லேபில்களில் காணப்படும் அடையாளங்கள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகள், இரசாயனப் பொருட்களை வாங்குவதற்கும் அதை சரியாகக் கையாள்வதற்கும் பயனுள்ளதாக அமையும்.

### அபாய அடையாளங்கள்

தொழிலகங்கள் மற்றும் தனிப்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் அபாயகரமான இரசாயனப் பொருட்களுக்கு, பின்வரும் தகவல்கள் மற்றும் வழிகாட்டுதல்கள் கட்டாயமானதாகும். அவை எப்போதும் கடைப்பிடிக்கப்படவேண்டும்.




**அபாய குறியீடுகள்**
சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் ஒன்று

**அபாய குறிப்புகள்**
அபாயத்தை குறித்த துல்லிய விளக்கம்
"பொதுவான பண்புகள்" பின்பக்கத்தைப் பார்க்கவும்

**பாதுகாப்புக் குறிப்புகள்**
அபாயத்தை தவிர்க்க நீங்கள் என்ன செய்ய வேண்டும
("நடவடிக்கைகள் ") பின்பக்கத்தைப் பார்க்கவும்

**UFI**
மிகத் தெளிவாகக் கண்டுபிடிக்கக்கூடிய வழிமுறையான (UFI) நஞ்சு ஏற்படும் வேளைகளில் வெகு விரைவாக இரசாயனப் பொருட்களை அடையாளம் காண உதவுகின்றது.

**அபாய அளவு**
அபாயத்தின் தீவிரத்தை எளிய முறையில் குறிக்கிறது

**லேபிளில் உள்ள குறிப்பு**
ஏனைய இரசாயனப் பொருட்களிலும் நீங்கள் இதேவிதமான லேபிள்களைக் காணலாம் - ஆகக்குறைந்தது விற்பனை நகரத்தின் அதிகார்வப்பூர்வமான மொழிகள் ஒன்றில்.

**பொருள் பெயர்**

**பொருள் விளக்கம**
தயாரிப்பாளர் குறிப்பிட்ட பயன்பாட்டை தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் ஒரு பொருளை உபயோகிக்க கூடாது.

**பயன்படுத்தும் வழிமுறை**
விசேடமாக அளவு வழிமுறையை எப்போதும் மிகச்சரியாகப் பின்பற்றவும்.

**உள்ளடக்கப் பொருட்கள்**
எவ்விதமான பதார்த்தம் கட்டாயமாக உள்ளடக்கப்பட வேண்டும் என்பது சட்டரீதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எந்தப் பொருட்கள் உள்ளடங்கியுள்ளன என்பதை தெரிவிப்பது சட்டப்படி கட்டாயமாகும்.

**தயாரிப்பாளர் முகவரி**

## இரசாயன பொருட்களை கவனமாக கையாள உதவும் முறைகள்

### அபாயங்கள்

இரசாயன பொருட்களை தவறாக கையாளுவது காயத்திலோ அல்லது மோசமான சுகாதார கேட்டிலோ முடியக்கூடும். அபாய தகவல்களை படித்து, தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதின் மூலம், நாம் காயங்களையும், நீண்டகால சுகாதார கேடுகளையும் தவிர்க்கலாம். பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் மற்றும் வழிமுறைகளை நீங்கள் உங்கள் நிறுவனத்தின் பாதுகாப்பு அதிகாரியிடமிருந்தோ அல்லது பொருளை வாங்கிய இடத்திலிருந்தோ பெற்றுக் கொள்ளலாம்.

#### மூச்சு உள்வாங்குதல்


**நிலமை:** சுவாச குழாயில் இரசாயன பொருட்களை உள்வாங்கும் அபாயம், இரசாயன பொருட்களை தெளிப்பதன் மூலம் எப்போது உள்ளது. மேலும் அரைக்கும் வேலைகளும் சுவாசப் பாதுகாப்புக் கவசம் அணியாமல் காற்றோட்டம் குறைவாக இருக்கும் இடங்களில் வேலை செய்வது இந்த அபாயத்திற்கு காரணமாக இருக்கக்கூடும்.

**அபாயங்கள்:** ஆவிகளை, தூசி மற்றும் வாயுக்களை சுவாசிப்பது சுவாச குழாய் எரிச்சலில் முடியக்கூடும். மேலும் இவை இரத்த ஓட்டத்தில் கலந்து கோமா மற்றும் மூச்சின்மை நோயில் முடியும் அபாயமும் உள்ளது.

#### தோல் தொடர்பு

**நிலமை:** தெளிப்பான், தோலை பெட்ரோல் போன்ற இரசாயன பொருளில் சுத்தம் செய்வது அல்லது பாதுகாப்புக் கையுறை இல்லாமல் வேலை செய்வதின் மூலமாகவும் தோல் இரசாயன பொருட்களுடன் தொடர்புக் கொள்ளக்கூடும்.

**அபாயங்கள்:** தோல் தொடர்பு எரிச்சல் அல்லது தோல் நோயில் முடியக்கூடும். மேலும் தொடர்பு அலர்ஜி, நீண்ட கால நோய் மற்றும் இரத்த ஓட்டத்தில் கலந்து நச்சாக முடியும் அபாயம் உள்ளது.



#### கண்களுக்கான அபாயம்

**நிலமை:** ஒரு இரசாயன தயாரிப்பு தெளிப்பான் மூலமாகவோ அல்லது அழுக்கான கைகளை தொடுவதன் மூலமாகவோ அல்லது பாதுகாப்பு கண்ணாடிகளை அணியாமல் இருப்பதன் மூலமாகவோ, கண்களை அடையக்கூடும்.

**அபாயங்கள்:** கண்களுடன் தொடர்பு கண் அரிப்பு அல்லது பார்வை கோளாறில் முடியக்கூடும்.

#### உட்கொள்ளுதல்

**நிலமை:** தூசி, திரவங்கள் மற்றும் இதர பொருட்கள், உதாரணமாக அழுக்கான கைகளுடன் உண்பது அல்லது உணவு பாத்திரங்களில் வைக்கப்பட்ட இரசாயன எச்சங்கள் மூலமாக உட்கொள்ளப்படும் அபாயம் உள்ளது.


**அபாயங்கள்:** இவை அரிப்புகளிலோ அல்லது வாய் எரிச்சல், குடல் எரிச்சல் அல்லது வயிற்று எரிச்சலில் முடியக்கூடும். இவை உள்வாங்கப்பட்டால் இரத்தில் கலந்து நச்சாக முடியும் அபாயம் உள்ளது. இது மரணத்திலும் முடியக்கூடும். விளக்கு எண்ணையிலுருந்து வரும் ஆவியை உள் வாங்குவதும் அதன் மூலன் வரும் நுரையீரல் நோயும் குறைத்தே கவனத்தில்க் கொள்ளபடுகிறது. ஒரு சிறிய அளவு கூட மரணத்தில் முடியலாம்.

### தக்க பாதுகாப்பு

இரசாயன பொருட்களை கையாளுவதில் அபாய தகவல்களை படித்து அதன்படி நடந்து கொள்ளும் நபர், தம்மை விபத்துகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுகிறார். கீழ்க்கண்டவாறு நாம் நம்மை பாதுகாத்துக்கொள்ள முடியும்:

**சுவாசப் பாதுகாப்புக் கவசம்**
இதன் மூலன் நீங்கள் உங்கள் நுரையீரல்களை தூசி மற்றும் நஞ்சு தன்மையுடைய ஆவிகளிலிருந்து பாதுகாக்கலாம். ஒரு தயாரிப்பை நீங்கள் உள் அறைக்குள் மட்டுமே உபயோகப்படுத்தும் போது, உதாரணமாக, அரைக்கும் வேலை, அதை காற்றோட்டமாக வைக்க மறக்காதீர்.


**நீண்ட ஸ்லீவ் கொண்ட உடைகள், மூடிய காலணிகள்**
வண்ணமடிக்கும் வேலை செய்யும் போது உங்கள் தோலை தூசி மற்றும் தெளிப்பான் இருந்து காக்கவும்.



**பாதுகாப்பு கண்ணாடி**
கண்கள் மிக எளிதில் பாதிப்படைபவை ஆதலால் கண்களை எப்போதும் பாதுகாக்க வேண்டும். நீங்கள் அடுமனை மற்றும் வாய்கால் சுத்தப்படுத்தும் பொருள்களுடன் வேலை செய்யும் போது எப்போதும் கண்ணாடிகளை அணியவும்.

**பாதுகாப்பு கையுறை**
கைகள் எப்போதும் வெளிப்பட்டு இருப்பவை, அதனால் அதிக கவனம் தேவை நீங்கள் அடுமனை மற்றும் வாய்கால் சுத்தப்படுத்தும் பொருள்களுடன் வேலை செய்யும் போது எப்போதும் பாதுகாப்பு கையுறைகளை அணிந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளவும்.

### வழக்கமான தனக்கான பாதுகாப்பு உபகரணம்



பாதுகாப்பு கண்ணாடி | பாதுகாப்பு முகமூடி | பாதுகாப்பு கையுறை

# அபாய குறியீடுகள் பற்றிய ஒரு கண்ணோட்டம்

**வழக்கமான தன்மைகள்** ▸ (தயாரிப்பு லேபிளின் மேலுள்ள அபாய குறிப்பை பார்க்கவும்)

**முறைகள்** ▸ (தயாரிப்பு லேபிளின் மேலுள்ள பாதுகாப்பு குறிப்பை பார்க்கவும்)

**தயாரிப்பு உதாரணங்கள்** ▸



## கவனம் ஆபத்து

தோல் எரிச்சல் உருவாக்கும், அலர்ஜிகள் சாத்தியம். தூக்க உணர்வு சாத்தியம். ஒரே முறை தொடர்பிலேயே நச்சுத்தன்மை உருவாக்கும் ஓசோன் பாதிப்பு சாத்தியம்

தோல் தொடர்பை தவிர்க்கவும். தேவையான அளவு மட்டுமே உபயோகப்படுத்தவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

சாமான் துலக்கி, சுத்தப்படுத்தும் பொருள், கடுநீர்



## பெரும் தீயை விளைவிக்க கூடியது

நெருப்பின் தொடர்பு மூலமாகவோ, சூடு, காற்று மற்றும் நீர் தொடர்பினாலோ தீயை உருவாக்க கூடும். தவறாக வைக்கும் போது வெளிகாரணிகள் இல்லாமல் தீ அபாயம் உள்ளது.

தீ விளைவிக்கும் மூலங்களை தவிர்க்கவும். தக்க தீயைணைக்கும் சாதனங்களை தயாராக வைக்கவும். வைக்கும் இடத்தில் உள்ள வெப்பத்தை கவனத்தில் கொள்ளவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

கிரில் லைட்டர், விளக்கு எண்ணெய், சுத்தப்படுத்தும் பொருள்



## தீ விளைவிக்க கூடியது

தீயை விளைவிக்கவோ அல்லது தீவிரப்படுத்தவோ கூடும். தீயின் போது பிராணவாயுவை விடுவதால், சிறப்பு பொருட்களின் துணைக்கொண்டே கட்டுப்படுத்த முடியும். நெருப்பை

ட்டுப்படுத்துவது இயலாது.த விளைவிக்கும் பொருட்களிலிருந்து தள்ளி வைக்கவும். தக்க தீயைணைக்கும் சாதனங்களை தயாராக வைக்கவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

நீர் பெராக்சட், ஈயம்



## நெருப்பின் அருகில்

வரும் போது, தீப்பொறிகள், சூடு இவற்றால் வெடிக்ககூடும். தவறாக வைக்கும் போது வெளிகாரணிகள் இல்லாமல் வெடிக்கும் அபாயம் உள்ளது.

பயிற்ச்சி பெற்றவர் மட்டுமே உபயோகிக்க வேண்டும். வைக்கும் போதும் உபயோகத்தின் போதும் சுற்றுசூழல் வெப்பத்தை நினைவில் கொள்ளவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

நைட்ரோ க்ளிசரின்



## அழுத்ததில் இருக்கும் வாயு

திரவ வடிவான, இருக்கப்பட்ட வாயுவை உள்ளடக்கியது.. வாசமில்லாத அல்லது பார்க்க முடியாத வாயுகள் தெரியாமல் ளியேறக்கூடும். அடக்கப்பட்ட வாயுகளை உள்ளடக்கிய வாளிகள் சூட்டினாலோ அல்லது வடிவு மாற்றத்தாலோ வெடிக்கூடும்.

சூரிய வெளிச்சத்தில் இருந்து தனித்து வைத்து, நல்ல காற்றோட்டமான இடத்திடல் பாதுகாத்து வைக்கவும் (பாதாள அறையில் அல்ல!). உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

ப்ரோப்பேன் மற்றும் ப்யூட்டேன் வாயு குடுவைகள், கார்பன் டை ஆக்சைடு 2-குடுவைகள் சோடா தயாரிப்பதற்கு



## நீர்வளத்தை சேதப்படுத்த கூடியவை

மீன், நீர் பூச்சிகள் மற்றும் தாவரங்கள் போன்ற நீர்வாழ் உயிரினங்களுக்கு குறைந்த அளவிலேயே நீண்டகால சேதம் விளைவிக்கூடும் .

லேபிள் மீதுள்ள அபாய மற்றும் பாதுகாப்பு விவரங்களை பின்பற்றவும். உபயோகத்தில் இல்லாத பொருட்களை வாங்கிய இடத்திலோ அல்லது சிறப்பு கழிவாக அப்புறபடுத்தவும்.

பாலிஷ் விலக்கி, பூச்சிகொல்லிகள், ஸ்விம்மிங்க் ரசாயங்கள், எஞ்சின் ஆயில்



## எரிச்சல் விளைவிப்பவை

மீன், நீர் பூச்சிகள் மற்றும் தாவரங்கள் போன்ற நீர்வாழ் உயிரினங்களுக்கு குறைந்த அளவிலேயே நீண்டகால சேதம் விளைவிக்கூடும் .

கடுமையான தோல் மற்றும் கண் சேதாரத்தை விளைவிக்கலாம். குறிப்பிட்ட வஸ்துகளை கரைக்கலாம் (உதாரணமாக துணிகள்) விலங்குகள், தாவரங்கள் மற்றும் உயிர் வாழ்வனவிற்கு தேம்விளைவிக்கூடியது.

அடுமனை, கால்வாய் சுத்தபடுத்தும் பொருள், கடினமான சுத்தபடுத்தும் பொருள் சுத்தபடுத்தும் அடக்கி



## சுகாதரக்கேடு விளைவிக்கும்

சில உடல் அங்கங்களை சேதப்படுத்தலாம்.. உடனடியான மற்றும் நீண்டகால சுகாதரக்கேடு விளைவிக்கும் அபாயம் உள்ளது. புற்றுநோய் அபாயம். கருவுறுதல் மற்றும் குழந்தை வளர்ச்சியை சேதப்படுத்தவும் கூடும். சுவாசக் குழாயில் நுழைந்தல் மரணம் ஏற்படும் வாய்ப்பு உள்ளது.

எப்போதும் உள்கொள்ளகூடாது, , தொடர்பை தடுக்கவும், நீண்டகால சேதத்தை நினைவில் கொள்ளவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

பெட்ரோல், மெத்தனால், வார்னிஷ், கிரில் லைட்டர், விளக்கு எண்ணெய், குறிப்பிட்ட ஈத்தர் எண்ணெய்கள்



## மிக்க நச்சு மையுடையது

சிறிது உட்கொண்டாலே மரணத்தில் முடியக்கூடும்.

உபயோகிக்கும் போது மிக்க கவனம். கையுறை மற்றும் முகமூடி போன்ற தக்க பாதுகாப்பு உடைகளை உபயோகப்படுத்தவும். சம்பந்தபடாத நபரை ஆபத்தில் இருந்து காக்கவும். உபயோகத்தின் பின் கவனமாக மூடவும்.

எலி பாஷாணம்

# முதல் உதவி
## இரசாயன பொருட்களால் ஏற்படும் விபத்துகளுக்கு

**24-மணி நேர அவசரகால எண்: 145**
அவசரம் இல்லை என்றால் 044 251 66 66-ஐ

### → உள்வாங்கியப் பின்

- உடனடியாக அவசரகால் எண் 145-ஐ தொடர்பு கொள்ளவும்
- முடியுமானால் இரசாயனப் பொருட்களை மற்றும் UFI ஐ தயார்நிலையில் வைக்கவும்
- வாந்தி எடுக்க வைக்க வேண்டாம். மருத்துவர் ஆலோசனை இல்லாமல் எந்த திரவமும் கொடுக்க வேண்டாம் (145 அல்லது மருத்துவர்)

### → மூச்சின் மூலம் உள்வாங்கியப் பின

- நன்றாக காற்று வரவிடவும்; மூடிய இடங்களில் கவனமாக இருக்கவும். காப்பாற்றுபவர் காயம் அடையக்கூடாது
- நோயாளியை அமைதிப்படுத்தவும்

### → தோல் தொடர்பின் பிறகு

- வலை உடைகளை உடனே களையவும்
- சம்பந்தப்பட்ட தோல் இடத்தை உடனே ஓடும் தண்ணீரில் கழுவவும்
- எரிச்சல் இல்லாத தோலை சவர்க்காரம் மற்றும் நீர் கொண்டு கழுவவும்

### → கண்களில் தெளிக்கபட்டால்

- கண்களை உடனே 10 நிமிடம் ஓடும் தண்ணீரில் கழுவும்; கண்களை நன்றாக திறந்து வைக்கவும்.

### → சுரணை இழந்துவிட்டால்

- சுரணை இழந்தவரை பக்கவாட்டில் படுக்க வைக்கவும். தலை கீழ்நோக்கி இருக்க வேண்டும்
- மருத்துவ உதவியை நாடவும்
- எந்த திரவவும் ஊற்றக்கூடாது
- வாந்தி வரவைக்க கூடாது

### → மூச்சு மற்றும் இரத்த ஓட்டம் நின்றுவிட்டால்

- உடனடியாக 144-ஐ (ஆம்புலன்ஸ்) அழைக்கவும்
- தேவைப்பட்டால் இதர பொருட்கள் (மாத்திரை துணுக்கு, வாந்தி) ஆகியவற்றை வாயிலிருந்து அகற்றவும்.
- இறுக்கமான உடைகளை தளர்க்கவும்
- மூச்சைடைப்பின் போது: சிறந்த முறையின் மூலம் மூச்சை வரவைப்பது (கவனம்: சையனைடாக இருப்பின் (பாதாம் வாசம்) வாய்-வாய் முயற்சி உதவி செய்பவருக்கு ஆபத்தானது)
- மாரடைப்பின் போது: மார் மஸாஜ் பயிற்சி பெற்ற உதவுபவர் மூலமாக


பதிப்பு

© அரசாங்க சுகாதார துறை பாக்
வெளியிடுபவர்: அரசாங்க சுகாதார துறை பாக்

ரசாயன பொருள்களை பாதுகாப்பாக கையாள ஒரு பிரச்சாரம்:

பாக், சேகோ, பா:ஃபு, பிஎல்வி மற்றும்
வெளியீடு ஆண்டு ஜனவரி 2026

இந்த தகவல் அட்டை ஜெர்மன், ஃப்ரென்ச், இத்தாலியன், ஆங்கிலம், ஸ்பானிஷ், போர்த்துகீசு, துருக்கி, அல்பானிய, செர்பிய மற்றும் தமிழ் மொழிகளில் பதிப்பிக்கபட்டுள்ளது. மேலும் பிரதிகளை இலவசமாக பெற கீழே உள்ள முகவரியை தொடர்புக் கொள்ளவும்.
BBL, Verkauf Bundespublikationen, CH-3003 Bern
E-Mail: verkauf.zivil@bbl.admin.ch
www.bundespublikationen.admin.ch
BBL-ஆர்டர் எண்: 311.784.tam

www.bag.admin.ch
www.cheminfo.ch


CHEMINFO.ch